**<u>S.C. No. 145 / 2023</u>**

**PW7 – Tmt. Bakiyalakshmi**

**17.04.2026**

**(A1 to A6 are present)**

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை :</u>**

**நேரம் 12.10 மணி**

**(சாட்சி காணொளியில் ஆஜர்)**

பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தால் மருத்துவர் அது குறித்து காயங்கள் குறித்து குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு 07-08-2022 அன்று காலை SRMC மருத்துவமனையின் மருத்துவர் பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்மணியை முழுவதுமாக பரிசோதனை செய்துவிட்டு There is no injuries in the Genital என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 07-08-2022 அன்று காலை 7.00 மணிக்கு பரிசோதனை செய்யும்போது இல்லாத காயங்கள் மதியம் 1.00 மணிக்கு பரிசோதனை செய்யும் காயம் இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தால் காயம் 4.00 மணிக்கு மேல் ஏற்பட்டிருக்க முடியும் என்றால் அது குறித்து என்னால் கருத்து சொல்ல இயலாது. நான் பாதிக்கப்பட்ட பெண்மணியை பிரசோதனை செய்யும் போது காயம் இருந்தது. நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள காயங்கள் முதல் தகவல் அறிக்கை மற்றும் பாதிக்கப்பட்ட பெண்மணி கூறியதன் அடிப்படையில் பதிவு செய்துள்ளேன் என்றால் பாதிக்கப்பட்ட பெண்மணி கூறிய விவரங்களின் அடிப்படையில் விபத்து பதிவேடு பதிவு செய்தேன். பாதிக்கப்பட்ட பெண்மணி யின் பிறப்புறுப்பில் எந்த காயங்கள் இல்லை என ஆய்வறிக்கையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவருடைய இடது பக்க மார்பகத்தில் காயம் இருந்ததை நான் பரிசோதனை செய்யும் போது பார்த்தேன். SRMC மருத்துவமனையில் பரிசோதனையில்போது பாதிக்கப்பட்ட பெண்மணிக்கு மார்பகத்தில் காயம் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் அதுகுறித்து என்னால் கருத்து கூற இயலாது.

**நேரம் 12.15 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.